
**மின்தமிழன் நா.கண்ணனின் நூல்கள்**

[place your orders @ https://pages.razorpay.com/KannanNoolgal]

# *மலேசியச் சிந்தனைகள்*

# மலேசியச் சிந்தனைகள்




மலேசியாவிலிருந்து வெளிவரும் நயனம் வார இதழில் "தீர்க்க விழி" எனும் பத்தியில் வெளி வந்த கட்டுரைகளின் தொகுப்பு இது.

மலேசியா, சிங்கப்பூர் என்பவை தமிழனின் இனிய கனவுகள். அவை இவன் கண்ணில் சொர்க்கபுரி. ஆனால் வாழ்வு என்றால் சிக்கல் இருக்கத்தானே செய்யும்? மலேசியத் தமிழர்களின் வாழ்வியல் சிக்கல்கள் பற்றிய பல்வேறு கோணங்களில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இது. தமிழ் அடையாளம் என்பது எவ்வகையில் அங்கு அமைகிறது, அதைத்தக்க வைக்க அவர்கள் படும் பாடு, இந்தியத் தமிழர்களின் வாழ்வு அவர்களை எவ்வளவு தூரம் பாதிக்கிறது? அதில் மீண்டு அவர்களுக்கென்று ஓர் அடையாளத்தைக் கொள்ள முடியுமா? என்பது போன்ற கேள்விகள் இந்த நூல் முன்வைக்கிறது. பன்மொழிச் சூழலில், மலேசியாவில் தமிழ் கொள்ளும் சவால்கள் என்ன? என்பதையும் விளக்குகிறது இந்த நூல்.

1. கேளுங்கள் தரப்படும்
2. சந்திர பிம்பம்
3. சக்திச் சுழற்சி
4. கொல்லாமை சூழும் நெறி!

5. நூற்றாண்டு கொண்டாடும் இந்திய சினிமா! (1913-2013)
6. புதிய அடையாளத்தை நோக்கிய நம் பயணம்!
7. தீயினுள் விரலை வைத்தால்?
8. வியட்நாமில் மாரியம்மன் கோயில்
9. வெயிலின் அருமை நிழலில் தெரியும்!
10. மலேசிய மண்ணில் தமிழனின் சுவடுகள்!
11. வாழ்வை வளப்படுத்தும் நற்கொள்கை!
12. மொழிச்சவால்கள்!
13. தைப்பூசம்
14. மாயை யதார்த்தமாகும் பொழுதுகள்!
15. நிச்சிரனின் ‘தாமரைச் சூத்திரம்’ ஓர் கண்காட்சி!
16. இசையும் இரைச்சலும்
17. இசை, நாட்டியம், காப்புரிமை!
18. கதைச்சொல்லி
19. மலேசியத்தமிழர்களின் வாழ்வியல் சிக்கல்கள்!
20. பன்முகம் கொண்ட இந்தியர்கள்!
21. மனமென்னும் கதவு

## கோ.புண்ணியவான் பரிந்துரை

நான் காணத்தவறிய மலேசியச் சிந்தனைகள்.

நான் கையிலெடுக்கும் ஒரு நூல் எனக்கு புதிய விஷயத்தைத் தரவேண்டும் . அந்த விஷயம் ஆழ அகலம் கொண்டு விரியவேண்டும். அதில் நிஜத்தன்மை மிளரவேண்டும். அதன் மொழி நடை எழுதப்படும் பொருண்மைக்கு ஏற்ப சிலாகித்துச் செல்ல வேண்டும்.அது தர்க்க சிந்தனைகளை உருவாக்கவேண்டும் என்பதை மனதில் கொண்டே வாசிக்கத் துவங்குகிறேன். என் எதிர்பார்ப்பு வாசிக்கத் தொடங்கிய ஒருசில பக்கங்களிலேயே பலித்துவிட்டால் நான் மிகுந்த உவப்போடு வாசிப்பில் ஈர்க்கப்பட்டுவிடுவேன். இந்நூல் நான் பிறந்து வளர்ந்த மலேசிய அரசியல் பண்பாடு மொழி சார்ந்த கட்டுரைகளைக் கொண்டது. எனவே மலேசியாவைப்பற்றி நான் அறியத் தவறிய விடயங்களைச் சொன்னால்தான் நூல் என்னை உள்ளிழுத்துக்கொள்ளும். இந்நூல் நான் எதிர்பார்த்த அனைத்தையும் கொடுத்தது.

இது தர்க்கங்கள் உருவாக்க வேண்டும் என்று நான் சொல்வது அறிவுத்தளம் சார்ந்தது. வாசிக்கும் அனைவரும் அறிவு சார்ந்த இயங்கக்கூடியவர்கள் என்பதால் இந்த தர்க்கம் அவர்கள் அறிதலை மேலும் விரிவாக்கி சிந்திக்க வைக்கும். பல இடங்களில் இந்நூல் தர்க்கங்களை உருவாக்கி கொண்டே போகிறது.

மலேசிய அரசியல் பண்பாடுகளை மலேசியவில் பிறந்தது முதலே வாழ்ந்து அவதானிப்பதற்கும், வெளிநாட்டினர் வேலை நிமித்தமாகவே , சுற்றுலா நிமித்தமாகவோ கொஞ்சகாலம் இங்கிருந்தே மலாசியாவை அவதானிப்பதற்கும் ஒரு நுணுக்கமான வேறுபாடு உண்டு . வெளிநாட்டினர் பார்வையில் இன, அரசியல் சார்பற்ற ஒரு நியாயம் இருக்கும். நிதானமாக எந்தச் சார்பு மனபாண்மையற்ற நேர்மையான பார்வையை வைக்க முடியும். அதிலும் குறிப்பாகக் பேராசிரியர் நா.கண்ணன் சில ஜனநாயக நாடுகளில் வேலைசெய்து பின்னர் மலேசியாவிலும் வேலைசெய்யும் காலத்தில்  மலேசியாவை ஒப்பு நோக்குகிறார்.  கல்விப்புலத்தில் இயங்குபவர்களின் எழுத்தில் மிகையுணர்ச்சி எழுந்து வர வாய்ப்பில்லை. இனச்சார்பு இருக்கவும் வாய்ப்பில்லை. நிதானமான தார்மிக் முறையில் தன் எண்ணங்களை எழுதிச் செல்வதாகவே பெரும்பாலான கட்டுரைகள் எனக்கு உணர்த்தின.

மலேசியாவில் வசிக்கின்ற சிறுபான்மையினரின் பின்னடைவின் மனக்குமுறலை வெளிப்படுத்துகிறது ஒரு கட்டுரை. மேற்கில் தங்கள் வாய்ப்புகளை அதிகாரத்திடம் கேட்டுப்பெறும் சமுகத்தைக் கொஞ்சம் கூர்ந்து பார்க்கச்சொல்லும் கட்டுரை இது. மாறாக கீழை நாடுகளில் அப்படியான தட்டிக்கேட்டு வாங்கும் பண்பாடு வளரவில்லை என்கிறார். இது ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது. நம்முடைய பண்பாட்டில் நம் வளர்ப்பு முறையில் நமக்கு மூத்தவரகளை, அவர்கள் சொல்வதில் நியாயம் பிறழ்ந்தாலும் எதிர்கேள்வி கேட்பதில்லை. அப்படிக் கேட்பது மரியாதைக் குறைவானது என்றே எண்ணுகிறோம். அந்தப் பண்பாடு அப்படியே நம் சமூகக்கட்டமைபில் ஒட்டிக்கொண்டு வளர்ந்து, இந்நாடு  முறைப்படி தன் குடிகளுக்குச் செய்யத் தவறியதை தட்டிக் கேட்காமலேயே இருந்துவிடுகிறோம். அதனால் ஒரு பிற்பட்ட சமுகாமாகவே நிலைத்துவிட்டதைச் சுட்டிக்காட்டுகிறார். மேலை நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தோர் தங்களின் உரிமையைத் தட்டிக்கேட்டுப் பெறுவதைப் பார்க்கிறோம். சிறுபான்மை சமூகத்திற்கும் பெரும்பான்மை சமூகத்திற்கு நிகரான உரிமையைத் தரும் ஜனநாயகக் கோட்பாட்டை நியாமான முறையில் நடைமுறைப் படுத்தியதால் உண்டான கொள்கையாக இதனைக் கருதலாம். ஆனால் மலேசியா அதுபோன்ற தளர்வை நமக்கு வழங்க மறுத்துக்கொண்டே வருவதை அவர் உன்னித்தே பார்த்திருக்கிறார்.

பூமி வெப்பமாதல் குறித்த கட்டுரை சூழியல் பிரக்ஞையை உண்டாக்குகிறது. மலேசியச் சாலைகலில் ஓடும் எண்ணற்ற கார்களினால் உண்டாகும் சூழலியல் கேட்டைச் சொல்கிறார். இங்கே ஒன்றைக் குறிப்பிடவேண்டும். இருபத்திரண்டு ஆண்டுகாலம் பிரதமராக இருந்த மஹாதிர் பெரும் பொருளாதாரத்தை விழுங்கும் திட்டங்களை நடைமுறைப் படுத்தினார். அவற்றுள் கார் உற்பத்தியும் ஒன்று. மலேசியத் தயாரிப்பிலான கார்கள் தரமற்றவையாக இருந்ததால் வெளிநாடுகளில் விலை போகவில்லை. எனவே இங்கே தகுதியுள்ளவர்கள அனைவரும் கார் வாங்க, அரசாங்கத்திலோ,  வங்கியிலோ எளிதில் கடனைப் பெற முடியும். அதன் காரணமாகவே கார்கள் புற்றீசல் போல சாலைகளின் மலிந்தன. அதனால் உண்டான சூழலியல் கேட்டை அழகுற சொல்லிச் செல்கிறார் நூலாசிரியர்.  ‘காருக்குள் இருக்கும்போது அது வெளியே இருப்பவர் பிரச்னை. காருக்கு வெளியே இருக்கும்போது அது பொதுப் பிரச்னை’. என்று நமக்கு நாமே முரணாவதைச் சொல்கிறார். நாம்  வெகுஜனத்திரளில் ஒருவர்தான் என்பதை நம் சுயநல போக்கு மறைத்துவிடுகிறது.  சூழலியல் சார்ந்த ஆதாரங்களையும் அதன் கேடுகளையும் சொல்லும் விழிப்புணர்வூட்டும் கட்டுரை இது.

அதோடு மலேசியாவில் மறுசுழற்சி முறை தீவிரமாக கடைபிடிக்கபடாததால் பிரபஞ்ச சக்தியை எந்த அளவுக்கு வீணடிக்கிறோம் என்று ஆய்வுப்பூர்வமாகச் சுட்டிக்காட்டுகிறார்.யோசிக்க வேண்டிய கட்டுரை மட்டுமல்ல உடனடியாக கடைபிடிக்கவேண்டிய ஒன்று. கோவிட் காலத்தில் உயிர்வளி போதாமை பற்றி லபோதிபோ என்று அடித்துக்கொண்ட இந்திய மக்களை நாம் பார்க்கிறோம். இயற்கை இடைவிடாது உயிர்வளியை உற்பத்தி செய்து கொண்டே இருக்க, இந்தச் சூழலியல் சார்ந்த இயற்கை கொடையைப் பொருட்படுத்தாத மனிதனே உயிர்வளி இல்லாமைக்கு முற்றும் முழுதுமான காரணமாகிறான் என்கிறார். இந்தக் கொரோனா காலத்தின் நெருக்கடிக்கு மனிதனின் இந்தக் கீழான போக்கே காரணமாவதை நாம் இன்றைக்குக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

இன்னுமொரு சிந்தனையைத் தூண்டக்கூடிய கட்டுரை ஓர் உயிர் வாழ இன்னொரு உயிரின் ஊண் தேவை என்ற மேற்கத்திய கருத்தியலைச் சொல்லும் கட்டுரை. நூலாசிரியர் வள்ளுவன் சொல்லைக்கொண்டு அக்கருத்து தவறானது என்று வாதிடுவது நம் தொன்ம காலத்து அறிவியலையும் அறவியலையும் எண்ணிப் பெருமை கொள்ளாமல் இருக்க முடியவில்லை. கொல்லாமை சார்ந்து அவர் சுட்டிக்காட்டும் சில குறள்கள் மேலைச் சிந்தனை பிற்போக்கானது என்கிறது. வள்ளுவன் வாக்கு எத்துணை மாண்புடையதாக இருந்தால் , அது அறிவியலில் முன்னேறிய மேற்கத்திய நாடுகளில் ஊண் உண்டு வாழ்ந்தவார்களை, தன் பக்கம் இழுத்து ஊண் உண்ணாமையை கடைபிடிக்கச் செய்திருக்கும்? அதுமட்டுமல்ல வள்ளுவர் இன்னும் ஆழப்பாய்கிறார். மாநுட நோய் தீர மருந்து தயாரிக்கும் பரிசோதனை முயற்சியில் விலங்குகள் பலியாவதைகூட வள்ளுவனின் அறச் சிந்தனை ஊடாடிப் பாய்ந்து கொல்லாமை அறத்தை நீட்சி காணவைத்தது என்று ஓரிடத்தில் சொல்கிறார்.

மலேசிய இந்திய இளைஞர்கள் அதிக வன்முறை கலாச்சாரத்தில் ஈடுபடுவதற்குக் காரணம் கடவுளுக்கு உயிர்பலி கொடுக்கும் கலாச்சாரத்திலிருந்து வருகிறது என்பதுவும் ஒரு காரணம் என்கிறது இன்னொரு கட்டுரை. இது சிந்திக்க வைக்கிறது. இங்கேதான் வாசகனின் தர்க்கச் சிந்தனைக்கு கொஞ்சம் வழிவிடுகிறார். ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் இந்தியர்களின் மரபணுவில் ஊறிப்போன உயிர்பலி கொடுக்கும் பழக்கத்தை அத்துணை எளிதில் இல்லாமல் செய்துவிட இயலாது என்றே தோன்றுகிறது. மலேசிய இந்தியர்களின் வன்முறைக்கு கலாச்சாரத்திற்கு காரணங்கள் கண்டறிய அரிய ஆய்வுகள் மேற்கொள்ளபடவேண்டும் என்று தூண்டுதலுக்கு இக்கட்டுரை வழி சொல்கிறது.

இறைவன் ஒருவனே என பிற மதங்கள் முழங்கும் நாடு மலேசியா.அவர்கள் சமய வழிபாடு மனிதர்கள் புழங்கும் எல்லா இடங்களிலும் இருப்பதையும் காட்டி நாம் ஏன் அதுபோன்ற வழிபாட்டு முறையைப் பின்பற்றவில்லை. நமக்கும் இறைவன் ஒருவன்தான் என்பதை திவ்விய பிரபந்தமும், தேவாரத் திருவாசகமும் உரைப்பதைச் சுட்டிக்காட்டி நமக்கும் கடவுள் ஒருவர்தானே என்பதால், நாமும் ஏன் அவர்கள் போன்று ஒற்றைக்கொள்கையைக் கடைபிடிக்கக்கூடாது என்ற சிந்தனையை முன்வைக்கிறார். இதுவும் தர்க்க சிந்தனையைத் தூண்டுகிறது.

அறிவே சிவம் என்று பாரதி சொல்வான். அதுபோல பஞ்சபூதங்கள் என்று நாம் வழிபடும் இயற்கையைத் தாண்டி இன்னொரு பூதம் உண்டு என்ற தர்க்க ரீதியாக வாதிடுகிறார். அது எது

என்றால், இந்த இணையம் என்கிற பூதம். அறிவியல் ரீதியாகச் சிந்தித்தால் இணையமும் பஞ்சபூதத்துக்கு இணையாக அடங்கிவிடுகிறது. எனவே மிகத் தெளிவாக இந்த இணைய பூதத்தை அறிவு பூதம் என்று சொல்லும்போது என் அறிவைத் தூண்டியது. இந்த அறிவுப்பூதத்தால். சடங்கு ரூபமான இயங்கிவரும் நம் சமயத்தில், சடங்குகள் இல்லாமாலாகிவிடும் நிலை உண்டாகும் என்று சொல்வது சமயத்துக்குள் ஆழப்பதிந்த மூடநம்பிக்கைக்கு மூட்டைகட்டிவிட முடியும் என்று எண்ணத் தோண்றுகிறது. சடங்குகள்தானே நம் அறிவித்தளத்தை எட்டிப்பிடிக்க விடாமல் செய்கிறன. எனவேதான் அறிவுப் பூதமாக இணையம் உருவெடுத்திருக்கிறது என்று சொல்வது சமகாலச் சிந்தனையாக மிளிர்கிறது.

மேலும் சில கட்டுரைகள் மிக சுவாரஸ்யமானவை. சியாம் என்ற சொல் ஷியாம் என்பதிலிருந்து மருவியிருப்பதும், வியட்னாமில் மிகோங் நதியை 'மா கங்கா' கங்கைத்தாய் என்று அவர்கள் அழைப்பது மலாய் அரசர்களைப் பாடுகா (பாதுகா) என்று அழைப்பதும் நம்முடைய இந்தியப் பண்பாடு நம் முந்தைய அரசர்களாலும் கடல் வழி வனிகர்களாலும் எந்த அளவுக்கு நிறுவப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது இந்திய மனம் பெருமையோடு அரவணைத்துக்கொள்கிறது..

சமீப காலமாக மலேசியாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இஸ்லாம் சமய அமைப்புகள், தமிழ் சீனத் தாய்மொழி தொடக்கப்பள்ளிகள் தேச ஒற்றுமைக்குக் கேடு விளைவிப்பவை என்று முழங்கி அதனை நீக்கி ஒரு மொழிக்கொள்கை நிலைநாட்ட வேண்டி நீதிமன்றம் வரை போயிருக்கிறார்கள். (இங்கே மலாய்க்கார மேலாண்மை எண்ணத்தை நிலைநாட்டத் துடிக்கும் மலாய் அரசியலாளர்களின் கீழான போக்கே இதற்குக் காரணம். (இன ஒற்றுமை என்ற சூளுரை எல்லாம் வெறும் பம்மாத்து வேலை) ஆனால் மேலை நாடுகளின் எண்ணம் இதற்கு நேர்மாறானது என்பது நகைமுரண். குறிப்பாக டென்மார்க்கில், வாழும் தமிழ்க்குழந்தைகளுக்கு அவ்வரசு தமிழைப் போதிக்கச்சொல்கிறது. பிற நாடுகளிலும் புலம் பெயர்ந்தோருக்கு தமிழைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஏனெனில் தாய்மொழி வழி கல்வி பயிலும் மாணவர்கள் மூளை வளர்ச்சியடையும் என்று ஆய்வு முடிவின் கருத்தை வலியுறுத்துகிறார் . தமிழ்க்குழந்தைகள் தாய்மொழியைப் பயிலாமல் அவர்கள் புலம்பெயர்ந்த நாட்டின் மொழியைப் பேசும்பொழுது உண்டாகும் அடையாளச் சிக்கலை விலாவாரியாக விளக்குகிறார். மலேசியாவில் தமிழ் தொடக்கப் பள்ளிகள் நிறையவே இருக்க, இங்குள்ள ஐம்பது விகிதத்துக்கு மேற்பட்ட நடுத்தர, மேல்தட்டு வர்க்கம் தங்கள் குழந்தையை மலாய் தேசியப் பள்ளிகளில் பதிவது பின்னாளில் அடையாளச் சிக்கலுக்கு வழி வகுக்கும் என்று சொல்வது நியாயமாகப் படுகிறது. இதன் நீட்சியாக வரும் மொழிச்சவால்கள் கட்டுரையில் பல்லின மக்கள் வாழும் நிலத்தில் மொழிச்சிதைவு ஏற்பட்டும்ப்போது அதனை சங்கம் வைத்துக்காப்பாற்ற வேண்டிய அவசியம் பற்றிப்பேசுகிறது. அவர் சொல் வலிமையானது என்றே நான் கருதுகிறேன். காரணம் 2018ல் அறுபது ஆண்டுகால தேசிய முன்னணி ஆட்சி கவிழ்ந்து எதிர்க்கட்சி நாட்டைக் கைப்பற்றிய போது மலேசியா இந்தச் 'சங்கம்' வைத்துத் தமிழை வளர்க்கும் பாணியை பின்பற்றி இருக்கிறது. இதற்கு தமிழ் மொழிக் காப்பகம் என்று பெயரிட்டிருந்தார்கள்.

தொடர்ந்து வரும் கட்டுரை பூஜாங் வரலாற்றிடம் சோழர் காலத்தில் முக்கியமான தங்க வணிக மையமாக இருந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுத் தொடர்கிறது. மலேசிய அரசு இதனை

மெல்ல மெல்ல அழித்து வருகிறது. இந்தச் செயலானது  உண்மை வரலாற்றை மறைக்கும் செயல் என்கிறார் மலாய்க்காரர்கள் பெரும்பான்மையாக வாழும் நாட்டில்  மத அடையாளம் வலிமையாக நிறுவப்பட்டு வருகிறது, இதன் காரணத்தால் பூஜாங் அழிவை தடுப்பது சிரமமாகிவிடும் என்று சொல்லத் தேவையில்லை. ஆகையால் மலேசிய இந்தியர்கள் ஏதாவது நடவடிக்கையில் இறங்கி பூஜாங் அழிவைத் தடுக்க வேண்டும் என்ற சிந்தனையை முன்வைக்கிறது.

ஆதிகாலத்தில் தென்கிழக்காசியாவுக்கு வந்த இந்தியர்கள் வணிகத்திற்காக வந்திருக்கிறார்கள்.வனிகத்தில் போட்டி நிலவியபோது போருக்காக படை திரட்டியிருக்கிறார்கள். அவை நம் பெருமையைப் பறைசாற்றும் பயணம். ஆனால் மூன்றாவது அலை பயணம் பரிதாபத்திற்குரியது. பஞ்சம் பிழைக்க புது நிலத்தைதேடி கங்காணி முறை மூலம் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள். இந்தியாவில் உண்டான தாதுப் பஞ்சம் இயற்கை பேரிடலால் வந்ததல்ல. சுயநலமிகுந்த காலனியவாதிகள் உண்டாக்கியது என்று நினைக்குபோது பதறுகிறது.

வாழ்வை வளப்படுத்தும் நற்கொள்கை கட்டுரையில்  ecological keystone species அதாவது உலகச் சமன்பாடு பற்றிய கட்டுரை சுவாரஸ்யமானது. இந்த keystone species என்று சொல்லப்படும் அடிநாதமாக இருக்கும் உயிர்களை அழித்தல் என்பது வேருக்கு விஷம் வைப்பதறகுச் சமம் என உரைக்கும்போது நமக்குப் பீதியை உருருவாக்குகிறது.

மலேசியச் சீனச் சமூகம் பௌத்தத்தைப் போற்றி நிகழ்ச்சிகளை முன்னெடுக்கிறது. ஆனால் அதன் பூர்வகத்துக்குச் சொந்தக்காரகளான நாம் அதனை வியப்போடு வேடிக்கை மட்டுமே பார்க்கிறோம். இது நம்மிடமிருந்து கைநழுவிப்போனது ஏன் என்ற கேள்வியை முன்வைக்கிறது இன்னொரு முக்கியமான கட்டுரை.

இசைபற்றிய ஒரு குறுகிய வரலாற்றைச் சொல்லும் கட்டுரை. பல நாட்டு இசையை எப்படி தமிழ்ச்சினிமா உள்வாங்கி அதனை சுய அடையளம் கெடாமல் ரசிகர்களுக்குத் தருகிறார்கள் என்று  சுவைகுன்றாமல் சொல்கிறார். எனக்கு விஸ்வநாதனையும் பிடிக்கும் இன்றைக்கு தேனாக ஒழுகும் குரலில் பாடும் சித் ஶ்ரீராமையும் பிடிக்கும். ஆனால் ஏன் பலர் விஸ்வநாதனோடு நின்றுவிட்டாரகள் என்று சொல்வது தமிழ்த் திரை இசையின் பரிமாணாங்களை உணர்த்திவிடுகிறது.

மலேசியாவை சலங்கை பூஜை என்னும் பெயரில் நடக்கும் கோமாளிக்கூத்தை சுட்டிச் சாடுகிறது ஒரு படைப்பு. குழந்தைகளுக்கு அது ஓர் கண்ணனின் இராசலீலை என்பது எப்படிப் புரியும்? இல்லை சம்ஹார மூர்த்தியான சிவனின் நாட்டியத்தின் பொருள் எப்படிப்புரியும்? உண்மையில் அங்கு நடந்தது ஒரு உடற்பயிற்சியே என்று நக்கலடிக்கிறார். நியாயமான கருத்து.

நான் ஒர் புனைவாளன் என்ற அடிப்படையில் ,கலை இறைவன் போல அநாதி என்ற சொல் என்னை பரவசமடையச் செய்தது. புலம் பெயர்வில் மொழியை மறந்தவர்கள் அடையாளச்சிகலில் தள்ளாடுபவர்கள். புலம் பெயர்ந்தவர்கள் அவர்கள் முன்னோர்கள் கொண்டு வந்த கலையால் மட்டுமே அடையாளம் காணப்படுகிறார்கள். பரதம் மட்டும் கற்றுக்கொடுக்கப்படவில்லை என்றால் பெரும் அடையாளச் சிக்கல் உண்டாகிவிடும்.  மலாக்கா செட்டிகள், இலங்கைப் போரில்

புலம் பெயர்ந்தவர்களை இதற்கு எடுத்துக்காட்டாய்ச் சொல்லலாம். ஆதலினால்தான் கலை இறைவன் போல அநாதியாகிறது என்பது எனக்குப் புதிது.

சைகை மொழியாக இருந்து, மொழியறிந்த ஆதி குடிகள்  கதை சொல்லும் முறையை வளர்த்தெடுக்கிறார்கள். அதன் பின் இதிகாசங்கள் கற்று நன்னெறிக்கதைகள் பிறப்பெடுக்கின்றன. அவற்றால் மாந்தரிடையே அறநெறி வளர்ந்தது. இன்றைக்குள்ள கோயில்களில் அதனைக் காண முடியவில்லை. எனவே அறம் சார்ந்து கற்ற சமூகமாக வளராமல் வன்முறை சமூகமாக மாறியதைச் சுட்டிக்காட்டுகிறது மேலுமொரு கட்டுரை. இதுவும் விவாத்ததைக் கிளர்த்துகிறது.

இவ்வாறு கட்டுரைகள்  பல்வேறு பிரச்னைகளியும் அதன் தீர்வுகளையும் நமக்கு வாசிக்கக் கொடுக்கின்றன.தைப்பூசத்தில் நடக்கும் கேலிக்கூத்து, பிற இனத்தவர் காட்டும் நிகழ்ச்சி ஒருங்கு, ஒரே மலேசியக் கொள்கை என ஒரு சுற்று வருகிறார் பேராசிரியர் நா. கண்ணன் கல்விப்புலத்தில் இயங்கும் பேராசிரியர். அவரின் இக்கட்டுரை சாதாரண வாசகனையும் போய்ச்சேரும் வண்ணம் சொல்லும் கருத்தை மிக எளிமையான கூறு மொழியில் வைக்கிறார் அறிவியல் சார்ந்த கட்டுரைகளை இதில் உள்ளன என்று அவர் சொன்னவுடன் நான் சற்றே பின்வாங்கினேன். காரணம் நான் அடிப்படையில் ஒரு புனைவாளன். ஆனால் அந்தவகை கட்டுரைகளில்தான் நான் மிகவும் ஈர்க்கப்பட்டிருந்தேன் காரணம் அதன் மொழி என்னை இலகுவாக்கியது.  மலேசிய அரசியலை, பண்பாட்டை, சமுகவியலைப்  பேராசிரியர் கண்ணன் நுணுக்கமாகவும் ஆழமாகவும் பார்த்து பயனான கட்டுரைத் தொகுப்பைத் தந்திருக்கிறார்.

வாசித்து இன்புற்ற,

கோ.புண்ணியவான்
சுங்கைப்பட்டாணி, மலேசியா